

பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரியில் நடந்த ஆண்டு விழாவில் மாணவர்களின் பக்தி நாடகம் நடந்தது.

# ராமகிருஷ்ண மிஷன் கல்லூரி ஆண்டு விழா

**பெ.நா.பாளையம்** ● பெரியநாயக்கன் பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரியில் ஆண்டு விழா நடந்தது.

வித்யாலய வெங்கட கிருஷ்ணன் உள் விளையாட்டு அரங்கில் நடந்த நிகழ்ச்சிக்கு, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கல்வி நிறுவனங்களின் துணை தலைவர் சுவாமி நிர்மலேஷானந்தாஜி மகராஜ் தலைமை வகித்தார். மாணவர் பேரவை தலைவர் தினேஷ்குமார் வரவேற்றார்.

கே.பி.ஆர்., மில்ஸ் நிறுவன மேலாண்மை இயக்குனர் நடராஜ் பேசுகையில்," மாணவர்கள் சுவாமி விவேகானந்தர் காட்டிய பாதையில் தன்னம்பிக்கையோடு, உழைத்து வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்," என்றார்.

ஆண்டு விழா மலரை, சுவாமி நிர்மலேஷானந்தாஜி வெளியிட, கலை, அறிவியல் கல்லூரி செயலாளர் சுவாமி கரிஷ்டானந்தாஜி, முதல்வர் ஜெயபாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டனர்.




பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் நடந்த, மாநில அளவிலான இயற்பியல் கருத்தரங்கில், மாணவர்களின் கலை நிகழ்ச்சி, அனைவரையும் கவர்ந்தது.

# பொங்கல் விழாவில் பரிசளிப்பு



ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரியில் பொங்கல் விழா நடந்தது. கல்வி நிறுவன செயலர் சுவாமி அபிராமானந்தர் தலைமை தாங்கினார். விழாவை ஒட்டி பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட விளையாட்டு போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.




பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரியில் நடந்த ஆண்டு விழாவில், பாஞ்சாலி சபதத்தை மாணவர்கள் நடன வடிவில் நடித்துக் காட்டினர்.

# ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா கல்லூரியில் பொங்கல் விழா



ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில், பொங்கல் விழாவையொட்டி, கரகாட்டம், காவடியாட்டம், உறியடித்தல் நிகழ்ச்சிகள் நடந்தன.

**பெ.நா.பாளையம்** ● பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரியில், பொங்கல் விழா நடந்தது.

நிகழ்ச்சிக்கு, வித்யாலய கல்வி நிறுவனங்களின் செயலாளர் சுவாமி அபிரமானந்தர் தலைமை வகித்தார். மங்களூர் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ஜித்தகாமானந்தர், சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர். கல்லூரி வளாகத்தில், கலை, அறிவியல் கல்லூரியில் உள்ள, 13 துறைகளின் சார்பில் பொங்கல் வைக்கப்பட்டன.

விழாவையொட்டி, தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் நடனங்கள், விளையாட்டுகள் ஆகியன கல்லூரி வளாகத்தில் நடந்தன. தொடர்ந்து, பம்பரம் விடும் நிகழ்வு, பின், உடலையும், மனதையும் வலுப்படுத்தும் சிலம்பாட்டம், கரகாட்டம், காவடியாட்டம், கும்மியாட்டம், தப்பாட்டம் ஆகியன நடந்தன. பின், கிராமிய கலைகளில் ஒன்றான, சேவை சண்டையும் நடந்தது.

தொடர்ந்து, கிராமங்களில் காணப்படும் நாட்டார் விளையாட்டுகளான தின்பண்டம் கடித்தல், உப்பு மூட்டை சுமத்தல், எலுமிச்சை பழ ஓட்டம், சாக்குப்பை ஓட்டம், மூன்று கால் ஓட்டம், உறியடித்தல், கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகளில் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிராம இளைஞர்களின் 'ஜமாப்' இசை நிகழ்ச்சியும், அதற்கேற்ப மாணவர்களின் நடனமும், பார்வையாளர்களை கவர்ந்தது. கல்லூரி வளாகத்தில், மாதிரி கிராமம் அமைக்கப்பட்டது. அதில், ஓலைக்குடிசை, மாடு, மாட்டுவண்டி, கன்று, சேவல், மரத்தடி விநாயகர் கோவில், அம்மி, ஆட்டுக்கல் இடம்பெற்று இருந்தன.